# முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## 2015

பொதுத் திறைசேரி

கொழும்பு - 01


தொலைபேசி : 011 -2484757

தொலைநகல் : 011-2430270

மின்னஞ்சல் : dgms@msd.treasury.gov.lk

# நோக்கு

அரச துறையின் பதவியணி முகாமை, சம்பள முகாமை

மற்றும் ஆலோசனை தொடர்பான முன்னணி அரச

நிறுவனமாகத் திகழ்தல்

# எமது பணி

அரசாங்க சேவையை உன்னத தரத்தில் கொண்டு

நடாத்துவதற்கு அவசியமான சிறந்த பதவியணியை

அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்குதல்

## பணிப்பாளர் நாயகத்திடமிருந்து

அரச துறையின் பல்வேறு துறைகளில் காலத்துக் காலம் எழுகின்ற மனித வளத் தேவைகளையும் நாட்டின் பொருளாதாரத் தேவைகளையும் கவனத்தில் எடுத்து அரசாங்கத் துறையில் போதிய பதவியணி எண்ணிக்கையைப் பேணி வரும் சவால்மிக்க பணிக்கு 2015 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக முகங்கொடுக்க முடிந்தது.

புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் திட்டமிட்டுள்ள துரித பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி இலக்குகளை அடையப்பெறும் செயற்பாட்டில் அரசாங்க சேவைகளை வினைத்திறனுடன் வழங்கி அபிவிருத்திச் செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கும் பொது மக்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில் சரியானதும் வினைத்திறன்மிக்கதும் நட்புறவானதுமான சேவையினை வழங்கக்கூடியவாறு அரசாங்க சேவையின் மனித வளங்களை மிகவும் பொருத்தமான முறையிலும் பயனுறுதி வாய்ந்த முறையிலும் முகாமை செய்தலும் , முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அடிப்படைப் பணிகளாக விளங்குகின்றன . அதற்கிணங்க, 2015 ஆம் ஆண்டு , மேற்குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்கு கூடுதலான பங்களிப்பை வழங்க முடிந்த ஒரு வருடம் என மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள முடியும்.

எமது திணைக்களத்தின் பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்காக உரிய வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பையும் வழங்கிய நிதி , திட்டமிடல் அமைச்சினதும் திறைசேரியினதும் செயலாளர் ஆர்.எச்.எஸ். சமரதுங்க அவர்களுக்கும், திறைசேரியின் பிரதிச் செயலாளர்களுக்கும் சகோதரத் திணைக்களங்களின் தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் . தேவையான சந்தர்ப்பங்களில் உரிய அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்கி ஒத்துழைத்த தேசிய சம்பள ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கும் முக்கியமான பணிகளில் ஒத்துழைத்த நிதி ஆணைக்குழு மற்றும் அனைத்து நிரல் அமைச்சுக்களின் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் குழு உணர்வுடனும் ஒத்துழைப்பு மனப்பான்மையுடனும் திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றிய ஊழியர் குழாத்துக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என். கொடகந்த
பணிப்பாளர் நாயகம்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. அறிமுகம் | 1-2 |
| 2. பதவியணி முகாமை | 3-7 |
| 3. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் முகாமை | 8 |
| 4. ஆய்வு, அவதானிப்புக்களை முன்வைத்தல் மற்றும் குழுப் பிரதிநிதித்துவம் | 9-11 |
| 5. தாபனப் பிரிவு | 12-21 |
| 6. நிதிப் பிரிவு | 22-23 |
| 7. அட்டவணை | |

# 1. அறிமுகம்

## 1.1 பின்னணி

நிதி, திட்டமிடல் அமைச்சின் கீழ் 1999 ஆம் ஆண்டில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் தேசிய , மாகாண மற்றும் உள்ளூராட்சி நிறுவன மட்டங்களில் அரச துறையின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவன மட்டத்தில் அவசியமான பதவியணியினை இனங்காணுதல் , அவ்வாறு இனங்காணப்படும் பதவிகளுக்கான சம்பளங்கள் தொடர்பில் சிபாரிசுகளை முன்வைத்தல் , அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்ப னிகளின் ஆட்சேர்ப்பு/ தரமுயர்வு நடைமுறைகளுக்கு அனுமதி வழங்குதல் போன்ற செயற்பாடுளின் ஊடாக அரச துறையின் மனித வளங்களை முகாமைசெய்வதற்கு இத்திணைக்களம் உச்ச அளவில் பங்களிப்பு வழங்கியுள்ளது . இதன் போது நாட்டின் நிதி நிலைமை , அபிவிருத்திப் போக்குகள், திறமைகள் நிரம்பிய அரச சேவையை உருவாக்குதல் போன்ற துறைகளில் குறிப்பாகக் கவனம் செலுத்துவது அத்தியவசியமாகக் காணப்பட்டது. இதற்காக, தேவையைப் பொறுத்து, உரிய ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பதவியணி மீளாய்வுகளை மேற்கொள்வதன் மூலம் அரச துறைக்கு அவசியமான சிறந்த மனித வளங்களைப் பேணி வருவதற்கு திணைக்களம் பாரியதொரு பங்களிப்பை வழங்கியுள்ளது.

## 1.2 குறிக்கோள்கள்

மிகவும் பயனுறுதிவாய்ந்த மனித வளத்தை அரசாங்க சேவையினுள் உருவாக்குவதற்கான பல குறிக்கோள்களை இலக்காகக் கொண்டு இத்திணைக்களம் இயங்கி வருகின்றது.

i. அரசாங்க சேவையின் பதவியணி முகாமை
ii. தேசிய சம்பளக் கொள்கைகளுக்கு இணங்க சம்பளங்களையும் படிகளையும் தீர்மானித்தல்.
iii. அரசாங்கத் துறை ஊழியர்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

## 1.3 வகிபாகம்

(i) ஊழியர் எண்ணிக்கைத் தேவைப்பாடுகள் தொடர்பான அங்கீகரிக்க ப்பட்ட அளவீடுகளையும் தரநியமங்களையும் உருவாக்குதல்.
(ii) அரசாங்கத் துறையில் சம்பளம் , மிகை ஊதியம், ஊக்குவிப்புத் திட்டங்கள், நலன்புரித் திட்டங்கள் மற்றும் வேறு ஊதியம் தொடர்பான தொகுதிகளை முகாமை செய்தல்.
(iii) அரசாங்கத் துறையின் வினைத்திறன் மற்றும் பயனுறுதியை உறுதிப்படுத்தும் குறிக்கோளை முன்னிறுத்தி நிறுவன ரீதியான மற்றும் பதவியணி தொடர்பான

மீளாய்வுகளை மேற்கொள்ளுதல் , முறைமைத் தொகுதிகளை மேம்படுத்துதல் , ஒழுங்குக் கட்டமைப்புக்களை உருவாக்குதல் மற்றும் பலப்படுத்துதல்.

(iv) அரச துறையில் மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துதலும் அவை தொடர்பான ஆய்வுகளை நடாத்துதலும்.

(v) பணிகள், குறிக்கோள்கள், முறைமைத் தொகுதி , நடைமுறைகள், பதவியணி என்பன தொடர்பான தாபன ரீதியான மீளாய்வுகளை நடாத்தி உரிய அதிகாரிகளுக்கு சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல்.

(vi) அரசாங்க நிறுவனங்களை மீள் கட்டமைப்பதையும் உரிய அளவில் அமைப்பதையும் நோக்காகக் கொண்டு அரசாங்கத் துறை நிறுவனங்களின் இரட்டைத் தன்மைப் பணிகளை அடையாளம் காணுதல்

(vii) மேலதிக ஊழியர் தொகைகளை அடையாளம் கண்டு , அவர்களை மீண்டும் பொருத்தமானவாறு சேவையில் ஈடுபடுத்துதலும் ஊழியர் குறைப்பு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தலும்.

(viii) பௌதிகச் சூழலை மேம்படுத்துவதற்கான தேவை கள், இயந்திர மயப்படுத்தல் / கணனிமயப்படுத்தல் மற்றும் சேவைகளை ஒப்பந்த அடிப்படையில் வழங்குதல் என்பவற்றுக்கான துறைகளை அடையாளம் காணுதல்.

(ix) அபிவிருத்தித் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு சேவைப் பிரமாணக் குறிப்புக்களையும் சேவை நிபந்தனைகளையும் மீளாய்வு செய்யும் ஆய்வுகளில் ஈடுபடுதலும் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தலும்.

(x) அரச துறையிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் அமர்த்துதல், ஆலோசகர்களைப் பணிக்கமர்த்துதல் தொடர்பான முன்மொழிவுகளை ஆராய்ந்து சிபாரிசுகளை முன்வைத்தல்.

(xi) அரச மற்றும் மாகாண அரச சேவைகளின் பதவியணி தொடர்பான தகவல் தொகுதிகளைப் பேணிவருதல்.

(xii) ஆட்சேர்ப்புக் கொள்கைகள் , திறன் விருத்திப் பயிற்சி மற்றும் பதிலீட்டுத் திட்டமிடல் என்பன தொடர்பான ஆய்வுகளிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் உரிய அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

(xiii) தேசிய சம்பள ஆணைக்குழுவுக்கு /அதன் துணை நிறுவனங்குக்குச் சேவைகளை வழங்குதல்.

# 2. பதவியணி முகாமை

## 2.1 அறிமுகம்

அரசாங்கத் துறையின் மனித வள முகாமையில் , முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வகிபாகம் பின்வரும் செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

- புதிய பதவிகளுக்கு அனுமதி வழங்குதல்
- பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்குதல்
- பதவிகளை இல்லதொழித்தல்.
- பதவிப் பெயர்களைத் திருத்துதல்
- அரசாங்கச் செயற்திட்டங்களுக்கான பதவியணிக்கு அனுமதி வழங்குதலும் சம்பளங்களைத் தீர்மானித்தலும்
- அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளின் ஆட் சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டங்களுக்கான நடைமுறை விதிகளை அனுமதித்தல்.

அரச துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை உரிய விதத்தில் மேற்கொள்வதற்கு , தேவையான சிறந்த மட்டத்தில் ஊழியர் எண்ணிக்கையைப் பேணி வருவது அவசியமாகும் . அதனடிப்படையில், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் , உள்ளூராட்சி மன்றங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்ப னிகள் மற்றும் அரசாங்கச் செயற்திட்டங்கள் என்பவற்றில் காலத்துக் காலம் எழுகின்ற மனித வளத் தேவைகளை கவனத்தில் எடுத்து நிறுவனங்களில் போதியளவு ஊழியர் எண்ணிக்கையைப் பேணி வருவதற்கான தனது பணிகளை முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2015 ஆம் ஆண்டில் சிறப்பாக நிறைவேற்றியது.

### 2.2 நிர்வாக மட்டத்திற்கேற்ப அரச துறையில்சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள்

அரச துறை ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 2015.12.31ஆம் திகதிக்கு 1,316,863 ஆகும். அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் , உள்ளூராட்சி நிறுவனங்கள் , பாதுகாப்புப் பிரிவுகள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்ப னிகள், அரச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட அரச தொழில்முயற்சி யாண்மைகள் என்பவற்றைக் கொண்ட அரச துறையின் மொத்த ஊழியர் குழாத்தின் உள்ளடக்கம் கீழே அட்டவணை 2.1 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1 அரச துறை ஊழிர்கள் - 2015**

| நிர்வாக மட்டம் | அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதி | தற்போதைய பணியாட்தொகுதி |
|---|---|---|
| தேசிய மட்டம் | 858,680 | 722,950 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 394,812 | 374,330 |
| **மொத்த அரசாங்க ஊழியர்கள்** | **1,253,492** | **1,097,280** |
| அரச தொழில்முயற்சகள் மற்றும் வங்கிகள் | 244,800 | 221,463 |
| **மொத்த அரசாங்க ஊழியர் துறை** | **1,498,292** | **1,316,863** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 2.3 அரசாங்க சேவையின் பணியாட்தொகுதி முகாமை- 2015

பொது மக்களுக்கு வினைத்திறன்மிக்கதும் பயனுறுதி வாய்ந்ததுமான அரச சேவையினை வழங்கும் நோக்கிலும் புதிய அரச கொள்கைகளுக்கு இணங்க பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கிலும் அமைச்சுக்கள் , திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளிட்ட அரசாங்கத் துறையில் 2015 ஆம் ஆண்டில் போதியளவில் ஊழியர் எண்ணிக்கை யைப் பேணி வருவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க அரசாங்க சேவையிலுள்ள பதவிகள் சிரேஷ்ட , மூன்றாம் நிலை , இடைநிலை, ஆரம்பநிலை என நான்கு மட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. சேவை மட்டங்களின் அடிப்படையில் அரசாங்க சேவையிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை வகையீடு அட்டவணை 2.2 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2 சேவை மட்டங்களின் அடிப்படையில் அரசாங்க சேவையின் ஊழியர் எண்ணிக்கை வகையீடு- 2015**

| நிர்வாக மட்டம் | சேவை மட்டம் (உண்மையான) | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | சிரேஷ்ட | மூன்றாம் நிலை | இடை நிலை | ஆரம்ப நிலை | |
| தேசிய (அரச தொழில்முயற்சியாண்மை மற்றும் வங்கிகள் உள்ளடங்கலாக) | 30,720 | 25,523 | 691,792 | 194,498 | 942,533 |
| மாகாண சபைகள் | 11,270 | 14,676 | 242,638 | 58,245 | 326,829 |
| உள்ளூராட்சி நிறுவனங்கள் | 908 | 814 | 12,868 | 32,911 | 47,501 |
| **மொத்தம்** | **42,898** | 41,013 | 947,298 | **285,654** | **1,316,863** |
| **சதவீதம் (%)** | 3 | 3 | 72 | 22 | 100 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

முகாமைத்துவ மட்டத்திலான பொறுப்புக்களைக் கொண்டுள்ள பொறியியலாளர்கள், நீதிமன்ற, சட்ட, வைத்திய அதிகாரிகள் மற்றும் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள் சிரேஷ்ட மட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் . அவர்களின் எண்ணிக்கை மொத்த ஊழியர் எண்ணிக்கையில் 3 சதவீதமாகும். மேற்பார்வைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறைவேற்றுத்தரத்திற்கு உதவி வழங்கும் நிர்வாக , திட்டமிடல், வழிநடாத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களும் மொழிபெயர்ப்பாளர்களும் மூன்றாம் மட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் . இவர்களும் முழு அரச துறையில் 3 சதவீதத்தினராவர். அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் , தாதிமார், ஆசிரியர்கள் முப்படைகளின்

படைவீரர்கள், பொலிஸ் கான்ஸ்டபிள்கள் போன்ற உத்தியோகத்தர்களைக் கொண்ட இரண்டாம் மட்டத்தினர் மொத்த அரச சேவையில் 72 சதவீத பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளனர். கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளை நாடளாவிய ரீதியில் வழங்குவதற்கான ஆசிரியர்களும் தாதிமார்களும் நாட்டில் கிராமங்களை மையமாகக் கொண்டு சேவை வழங்குதல் மற்றும் கிராமிய அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான நீட்சி உத்தியோகத்தர்களும் கள உத்தியோகத்தர்களும் அரச சேவையில் அதிகளவில் காணப்படுவதை இதனமூலம் அறிந்து கொள்ள முடியும் . முழு அரச துறையினதும் ஊழியர் எண்ணிக்கையில் 22 சதவீதத்தை சாரதிகள் , அலுவலக உதவியாளர்கள் போன்ற ஊழியர்களைக் கொண்ட ஆரம்ப மட்டத்திலுள்ளவர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர்.

### 2.3.1 புதிய பதவிகளை உருவாக்குதல் - 2015

புதிதாகப் பதவிகளை அனுமதிக்கின்ற போது நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணி, நாட்டின் நிதி நிலைமை மற்றும் வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் , பதவிகளை உருவாக்குவதற்கான காலத்தின் தேவை என்பன கவனத்திற் கொள்ளப்படுகின்றன . அரசாங்கத் துறைக்கான பதவிகளைப் புதிதாக உருவாக்குவது தொடர்பாக அமைச்சுக்கள் , திணைக்களங்கள், மாகாண சபைகள் , அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்ப னிகள் மட்டத்தில் செய்யப்பட்ட வகைப்படுத்தல் 2012-2015 காலப் பகுதிக்கான ஒப்பீட்டு ரீதியான தகவல்களுடன் கீழே அட்டவணை 2.3 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.3 புதிய பதவிகளை உருவாக்குதல் (2012-2015)**

| நிறுவனம் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பதவிகளின் எண்ணிக்கை | சதவீதம் (%) | பதவிகளின் எண்ணிக்கை | சதவீதம் (%) | பதவிகளின் எண்ணிக்கை | சதவீதம் (%) | பதவிகளின் எண்ணிக்கை | சதவீதம் (%) |
| அமைச்சு/ திணைக்களம் | 38,368 | 78 | 15,315 | 77 | 5,326 | 50 | 11,179 | 70 |
| மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் | 8,572 | 17 | 3,093 | 16 | 3,926 | 37 | 3,131 | 20 |
| அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகள் | 2,217 | 5 | 1,330 | 7 | 1,422 | 13 | 1,557 | 10 |
| **மொத்தம்** | **49,157** | **100** | **19,738** | **100** | **10,674** | **100** | **15,867** | **100** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

இதற்கிணங்க 2015 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட புதிய பதவிகளில் எழுபது (70%) சதவீதமானவை அமைச்சுக்களுக்காகவும் திணைக்களங்களுக்காகவும் உருவாக்கப்பட்டவையாகும்.

### 2.3.2 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதிவழங்குதல் மற்றும் பதவிகளை இல்லாதொழித்தல்

அரசாங்க சேவைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளிட்ட மாகாண அரச சேவையில் ஏற்படக்கூடிய பதவி வெற்றிடங்களை நிரப்பும் பணியை நிரல் அமைச்சுக்களின் செயலாளர்களின்/ மாகாண பிரதம செயலாளர்களின் முன் அனுமதியின் அடிப்படையில் மேற்கொள்ள 03/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டினுள் இடம்பெற்ற அமைச்சரவைத் திருத்தங்களின் போது அமைச்சுக்களின் விடயங்கள் திருத்தப்படுவதற்கு சமமாக ஊழியர் குழாமும் பொருத்தியமைக்கப்பட்டது. அதற்கேற்ப அனுமதிக்கப்பட்டிருந்த பதவிகள் ஒவ்வோர் அமைச்சினதும் சேவைத் தேவைப்பாடுகளுக்கேற்ப இற்றைப்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

### 2.3.3 செயற்திட்டப் பணியாட்தொகுதியினரை அனுமதித்தலும் சம்பள முகாமையும்

தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் நாட்டில் அமுலாக்கப்படும் பல்வேறு அபிவிருத்திச் செயற்திட்டங்களைத் திட்டமிட்ட கால எல்லைகளுக்குள் பூர்த்தி செய்வதற்கு அவசியமான பணியாட்தொகுதியினருக்கு அனுமதி வழங்குதல் , அப்பதவிகளுக்கான சம்பளங்களைத் தீர்மானித்தல் என்பன 2007.04.05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றன . 2015 ஆம் ஆண்டில் இச்செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு குறித்த அபவிருத்திச் செயற்திட்டங்கள் அமுலாக்கப்படும் நிரல் அமைச்சுக்கள் / மாகாண சபைகள் , வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் , தேசிய திட்டமிடல் திணைக்களம் , செயற்திட்ட முகாமை மற்றும் மேற்பார்வைத் திணைக்களம் என்பன இத்திணைக்களத்திற்கு சிறந்த முறையில் ஒத்துழைப்பு வழங்கின.

**அட்டவணை- 2.4 செயற்திட்டப் பணியாட்தொகுதியினருக்கு அனுமதி வழங்கல் – 2015**

| தொடர் இல | செயற்திட்டம் | பதவிகளின் தொகை |
|---|---|---|
| 1. | இரணமடு நீர்வழங்கல் மற்றும் சுகாதாரச் செயற்திட்டம் | 16 |
| 2. | உபாயமுறைப் பாதுகாப்புத் தொடர்பாடல் செயற்திட்டம் | 04 |
| 3. | உமா ஒயா பலநோக்கு அபிவிருத்திச் செயற்திட்டம் | 08 |
| 4. | எய்ட்ஸ்,சயரோகம் மற்றும் மலேரியா ஒழிப்பு உலகளாவிய நிதிய செயற்திட்டம் | 397 |
| 5. | களுகல் ஒயா நீர்த்தேக்கச் செயற்திட்டம் | 02 |
| 6. | சிறியளவிலான கைத்தொழில்களின் தலைமைத்துவம் மற்றும் தொழில்முயற்சியாண்மையாளர்களை மேம்படுத்தும் செயற்திட்டம் கட்டம் III | 01 |
| 7. | நீர் வளங்கள் மற்றும் சுகாதாரம் போன்றவற்றை மேலும் மேம்படுத்தும் செயற்திட்டம் | 90 |
| 8. | டெங்கு மருத்துவத் தடுப்பூசிப் பரீட்சிப்புக்கான குடும்பக் கல்விச் செயற்திட்டம் | 22 |
| 9. | தல்பிட்டிகல நீர்த்தேக்கச் செயற்திட்டம் | 11 |
| 10. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இறைவரி நிர்வாக முகாமைத்துவத் திணைக்களத்தின் தகவல் அலகை செயற்படுத்துவதற்கான செயற்திட்டம் | 71 |
| 11. | உள்நாட்டு பொருளாதார அபிவிருத்திக்கான நிர்வாகச் செயற்திட்டம். | 10 |
| 12. | தொம்பே கழிவகற்றல் குப்பை மேட்டு செயற்திட்டம் | 01 |
| 13. | மீன்பிடித் துறைமுக மற்றும் நங்கூரமிடும் இடங்களின் அபிவிருத்தி | 06 |
| 14. | வளர்ந்து வரும் பகுதிகளில் அடிப்டை சமூக சேவைகளை விருத்தி செய்வதற்கான செயற்திட்டம் | 01 |
| 15. | துறைசார் திறன்கள் அபிவிருத்திக்கான செயற்திட்டம் | 40 |
| 16. | முன்னுரிமை வீதிகள் செயற்திட்டம் கட்டம் III | 260 |
| 17. | புர நெகும செயற்திட்டம் | 05 |
| 18. | முன்பிள்ளைப் பருவ விருத்தி செயற்திட்டம் | 39 |
| 19. | பதுளை - செங்கலடி வீதி செயற்திட்டம் | 20 |
| 20. | மீன் ஏற்றுமதிக்கு ஐரோப்பிய சங்கம் விதித்துள்ள தடையை துரிதமாக நீக்குவதற்கான செயற்திட்டம் | 83 |
| 21. | மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு செயற்திட்டம் | 93 |
| 22. | இணைந்த வீதி முதலீட்டு செயற்திட்டம் | 215 |
| 23. | மொரகஹகந்த - களு கங்கைச் செயற்திட்டம் | 284 |
| 24. | மொரான நீர்த்தேக்கச் செயற்திட்டம் | 02 |
| 25. | யான் ஓய நீர்த்தேக்கச் செயற்திட்டம் | 186 |
| 26. | நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கான செயற்திட்டம் | 06 |
| 27. | யுத்தத்தின் போது பாதிப்புக்களுக்குள்ளான பிரதேசங்களை துரிதமாக /அவசரமாக அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம். | 14 |
| 28. | பாரிய குருநாகல் நீர்வழங்கல் மற்றும் கழிவு நீர் செயற்திட்டம் | 01 |
| 29. | அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டம் | 350 |
| 30. | இலங்கை அணுசக்தி அதிகார சபையை மீள் நிறுவுகை செய்வதற்கான செயற்திட்டம் | 02 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 3. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்க ளத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அரசாங்கத் துறையில் சம்பளம், மிகை ஊதியம் , ஊக்குவிப்புத் திட்டங்கள் , நலன்புரித் திட்டங்கள் மற்றும் வேறு ஊதியம் தொடர்பான தொகுதிகளை முகாமை செய்யும் பணியும் மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றது. இச்செயற்பாட்டின் போது தேசிய சம்பள ஆணைக்குழு , அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச் சு அரச தொழில் முயற்சிகள் திணைக்களம், தேசிய வரவுசெலவுத் திணைக்களம் என்பவற்றின் அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் கவனத்திற்கொண்டு உரிய தீர்மானங்கள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றன . சம்பள மற்றும் ஊதியங்கள் தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகள் எழுகின்ற சந்தர்ப்பங்களில் அமைச்சுக்கள், திணைக்களங்களிடமிருந்து கிடைக்கின்ற கோரிக்கைகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கும் செயற்பாடும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைக்கு இணங்க 2015ஆம் ஆண்டிலும் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்ப னிகளின் மீள் கட்டமைப்புச் செயற்பாடுகளும் சம்பளங்களையும் படிகளையும் தீர்மானிக்கும் செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டது . இவற்றுடன் தொடர்புடைய வகையில் 2015 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் கீழே அட்டவணையில் காட்டப்படுள்ளன.

### முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைள்– 2015

| | |
|---|---|
| 1. 2015.09.21 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை 01/2015 | 2015 வரவு செலவுத் திட்ட யோசனைக்கு இணங்க அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளிலுள்ள ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களுக்கான கொடுப்பனவை வழங்கல் |
| 2. 2015.12.09 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை 02/2015 | அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகளிலுள்ள பணியாட் தொகுதியினருக்கு 2015ஆம் ஆண்டுக்கான ஊக்குவுப்புக் கொடுப்பனவை வழங்கல் |

## 4. ஆய்வு, அவதானிப்புக்களை முன்வைத்தலும் குழுப் பிரதிநிதித்துவமும்

### 4.1 ஆய்வுச் செயற்பாடுகள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளில் அரசாங்க துறையின் ஊழியர் எண்ணிக்கைகளுடன் தொடர்புடைய மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துதல், அரசாங்க நிறுவனங்களை மீள் கட்டமைத்தல் , போதிய ஊழியர் தொகையைப் பேணி வருதல் , அரசாங்க துறையின் பதவியணி தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட அளவீடுகளையும் தரநியமங்களையும் உருவாக்குதல் , சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய ஊதியங்கள் தொடர்பில் ஆய்வு செய்து அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல் , தீர்மானங்களை வழங்குதல் , சமகால அபிவிருத்தித் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு அரசாங்கத் துறையில் பல்வேறு சேவைகளுக்கான சேவைப் பிரமாணக் குறிப்புக்களையும் சேவை நிபந்தனைகளையும் மீளாய்வு செய்கின்ற போது தேவையான அவதானிப்புக்களையும் சிபாரிசுகளையும் சமர்ப்பித்தல் போன்ற சந்தர்ப்பங்களில் திணைக்களம் ஏனைய நிறுவனங்களுடன் நெருக்கமான முறையில் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.

இச்செயற்பாடுகளை உயர்தரத்துடனும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்கு இத்திணைக்களத்தில் ஆய்வுப் பிரிவு ஒன்று தாபிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் பணிகளைப் பயனுறுதிவாய்ந்த முறையில் மேற்கொள்கின்ற போது தேவைப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுப்பதற்கான தகவல் சேகரித்தல் மற்றும் அத்தகவல்களைப் பகுப்பாய்வு செய்து அவதானிப்புக்களுடனும் பரிந்துரைகளுடனும் அறிக்கை சமர்ப்பித்தல் என்பன ஆய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியமான பணிகளாகும். இதன் போது தேவையான விசாரணைகளுக்கான / ஆய்வுகளுக்கான ஆய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் குறித்த நிறுவனங்களுக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பப்பபட்டு தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

### 4.2 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புக்களை முன்வைத்தல்

அரச துறையின் தாபனச் செயற்பாடுகள் , சம்பளங்கள் மற்றும் படிகள் போன்ற இத்திணைக்களத்தின் விடயப் பரப்புக்குள் அடங்குகின்ற விடயங்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை முன்வைப்பதும் இத்திணைக்களத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும் . 2015 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் அவை அடங்கும் விடயப்பரப்பு என்பன தொடர்பான விபரங்கள் அட்டவணை 4.1இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1 அமைச்சரவைப் பத்திர அவதானிப்பு வகையீடு-2015**

| தொடர் இல | விடயம்/ துறை | விஞ்ஞாபனங்களின் எண். |
|---|---|---|
| 1. | பதவிகளுக்கு நியமித்தல்/ஆட்சேர்ப்புச் செய்தல். | 217 |
| 2. | சேவையை நீடித்தல் | 47 |
| 3. | புதிய பதவிகளை உருவாக்குதல் | 18 |
| 4. | ஊதியம் | 47 |
| 5. | சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்,மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைவிதிகள் | 57 |
| 6. | ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் | 13 |
| 7. | ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் | 49 |
| 8. | ஏனையவை | 89 |
| **மொத்தம்** | | **537** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2015 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களில் நியமனங்கள் வழங்குதல் , சேவையை நீடித்தல் , ஊதியம் தொடர்பான விடயங்கள் என்பன முக்கியமாக அமைந்தன . அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களை வழங்கியது தவிர , நாளாந்தம் நடைபெறும் தாபனச் செயற்பாடுகள் தொடர்பான அமைச்சரவை உப குழுக் கூட்டங்களிலும் திணைக்களம் பங்கேற்றது.

2005-2015 வரையான காலப் பகுதியில் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பான ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் அட்டவணை 4.2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.2 அமைச்சரவைப் பத்திரங்களுக்கான அவதானிப்புக்களை முன்வைத்தல்**

| **வருடம்** | **2005** | **2006** | **2007** | **2008** | **2009** | **2010** | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை | 605 | 820 | 780 | 750 | 1272 | 1598 | 1019 | 399 | 499 | 449 | 537 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 4.3 குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல், ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் மற்றும் தொடர்பாடல்

அபிவிருத்தி மற்றும் தாபனச் செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் மாநாடுகளிலும் கலந்துரையாடல்களிலும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நிதி , திட்டமிடல் அமைச்ச மற்றும் திறைசேரி என்பவற்றைப் பிரதிநிதித்துவம் செய்து செயலூக்கத்துடன் பங்கேற்றனர்.

- தாபன விடயங்களுக்கான அமைச்சரவை உப குழு
- அமைச்சரவையினால் திணைக்களத்தின் பிரதிநிதிகள் அடங்கலாக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுக்கள்
- பொதுக் கணக்குகள் குழு (COPA)
- மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் மாநாடுகள்
- மாகாண பிரதம செயலாளர்களின் மாநாடுகள்
- தேசிய சம்பள ஆணைக்குழுவின் கலந்துரையாடல்கள்
- செயற்திட்ட முன்னேற்ற மீளாய்வு மற்றும் வழிநடத்திச் செல்லும் குழுக்கள்
- நியதிச்சட்ட நிறுவனங்களின் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மற்றும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்
- பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள்

மேலும், பல்வேறு நிறுவனங்களின் கோரிக்கையின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சைச் சபை அங்கத்தவர்கள் என்ற வகையிலும் இத்திணைக்களத்ன் அங்கத்தவர்கள் ப ங்கேற்றனர். மேலும் அரசாங்க நிறுவனங்களின் பதவியணி முரண்பாடுகள் தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் தொடர்ச்சியான முறையில் கலந்துரையாடல்களை நடாத்த ப்பட்டன. இவ்வாறு அரசாங்கத் துறையில் வினைத்திறன்மிக்க மனித வள முகாமை முறையொன்றை உருவாக்கும் நோக்கில் பயனுறுதிவாய்ந்த தொடர்பாடல் முறையொன்றைப் பேணி வருவதற்கு திணைக்களம் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுத்து வருகின்றது.

# 5. தாபனப் பிரிவு

## 5.1 அறிமுகம்

திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க முறையிலும் நிறைவேற்றுவதற்குத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் திருப்தியை உச்ச அளவில் வைத்திருப்பது அவசியமாகும் . திணைக்களத்தின் பௌதி கச் சூழல் , தொழிற் திருப்தியை அதிகரிக்கக்கூடிய நட்புறவான அலுவலகச் சூழல் என்பவற்றை உருவாக்குவதற்கும் ஓர் அணியாகச் செயற்படுவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கும் தாபனப் பிரிவு நடவடிக்கை எடுத்தது.

2015 ஆம் ஆண்டில் திணைக்களத்திடம் காணப்பட்ட மனித மற்றும் பௌதிக வளங்களை உச்ச அளவில் வினைத்திறனுடனும் பயனுறுதியுடனும் பயன்படுத்துவதன் ஊடாக திணைக்களத்திடம் எதிர்பார்க்கப்படும் சேவைகளைத் தடங்கலின்றி நிறைவேற்றுவதும் சாத்தியமாகியது. 2015.12.31 ஆந் திகதி திணைக்களத்தின் மொத்தப் பதவியணி தொடர்பான தகவல்கள் அட்டவணை 5.1 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.1 ஊழியர் குழாம் பற்றிய தகவல்கள் 2015.12.31 இல் உள்ளவாறு**

| தொடர் இல | பதவி | அனுமதிக்கப்பட்ட எண். | தற்போதைய எண். | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | 00 |
| 2. | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 01 | 00 | 01 |
| 3. | பணிப்பாளர் | 07 | 03 | 04 |
| 4. | பிரதி / உதவிப் பணிப்பாளர் | 10 | 08 | 02 |
| 5. | கணக்காளர் | 01 | 01 | 00 |
| 6. | உதவிப் பணிப்பாளர் (த.தொ.தொ.) | 01 | 00 | 01 |
| 7. | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 01 | 00 |
| 8. | மொழிபெயர்ப்பாளர் | 01 | 01 | 00 |
| 9. | ஆராய்ச்சி உதவியாளர் | 07 | 03 | 04 |
| 10. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 02 | 03 | -01 |
| 11. | தகவல் தொ.நுட்ப உதவியாளர் | 01 | 01 | 00 |
| 12. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 31 | 28 | 03 |
| 13. | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 03 | 00 | 03 |
| 14. | ஆவண உதவியாளர் | 01 | 00 | 01 |
| 15. | சாரதி | 07 | 07 | 00 |
| 16. | அலுவலக உதவியாளர் | 07 | 07 | 00 |
| | **மொத்தம்** | **82** | **64** | **18** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2015.12.31 ஆந் திகதியில் காணப்பட்ட ஊழியர் குழாம் கீழே பட்டியல் இலக்கம் 01இல் காட்டப்பட்டுள்ளது.

**பட்டியல் – 01 2015.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான ஊழியர் குழாம்**

| தொடர் இல | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | திருமதி என். கொடகந்த | பணிப்பாளர் நாயகம் |
| 2. | திருமதி.டி.எச்.எஸ். புள்ளபெரும | பணிப்பாளர் |
| 3. | திருமதி. எஸ்.எச்.டி. களுதந்திரி | பணிப்பாளர் |
| 4. | திரு. எம்.எம்.சி.பி.மொஹொட்டிகெதர | பணிப்பாளர் |
| 5. | செல்வி சாமிகா மதுவன்தி | உதவிப் பணிப்பாளர் |
| 6. | திரு. எம்.ஏ. கருணாரத்ன | உதவிப் பணிப்பாளர் |
| 7. | திரு.டபிள்யு.எச்.ஜீ. கோசல | உதவிப் பணிப்பாளர் |
| 8. | செல்வி எம்.டி. அபேகுணவர்தன | உதவிப் பணிப்பாளர் |
| 9. | திருமதி டபிள்யு.டி.சேபாலிகா | உதவிப் பணிப்பாளர் |
| 10. | செல்வி எஸ்.ஏ.எச்.சமரசிங்க | உதவிப் பணிப்பாளர் |
| 11. | திரு. பீ.எல்.எம். சத்துரங்க | உதவிப் பணிப்பாளர் |
| 12. | திரு. எம். ஏ.எஸ். மதுஷங்க | உதவிப் பணிப்பாளர் |
| 13. | திருமதி கே.டீ.ஐ.எஸ்.கே. சிறிவர்த்தன | கணக்காளர் |
| 14. | திரு. பீ.கே. சரத்சந்திர | நிர்வாக உத்தியோகத்தர் |
| 15. | திருமதி பீ.டி.டி. சமரசேகர | மொழிபெயர்ப்பாளர் |
| 16. | திருமதி. எம்.எம்.ஏ.என். மல்போரு | ஆராய்ச்சி உதவியாளர் |
| 17. | திரு. எஸ்.எம்.எம்.டி. சமரவீர | ஆராய்ச்சி உதவியாளர் |
| 18. | திரு. பி.எம். சரத் | ஆராய்ச்சி உதவியாளர் |
| 19. | திருமதி எச்.எஸ்.ஏ. ஹேனெபொல | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 20. | திருமதி எஸ்.எஸ். அல்பிட்டியகே | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 21. | திருமதி ஈ.என். ரணசிங்ஹ | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 22. | திரு. எம்.பீ.எஸ். சல்காது | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் |
| 23. | திருமதி எம்.டி.பீ.எஸ்.ஆர். பதிரண | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 24. | திருமதி ஏ.எம்.எஸ்.எஸ்.கே. அரம்பத் | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 25. | திருமதி கே.எஸ்.எஸ்.ஆர். செனெவிரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 26. | செல்வி எச்.எல். மங்கலிகா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 27. | திருமதி. ஏ.எம்.என். ஷியாமலீ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 28. | செல்வி கே.ஐ. பெரேரா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 29. | திரு. டபிள்யு.எம். சமிந்த குஸூம் | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 30. | திரு எஸ்.எஸ். பியன்வில | அரச முகாமைத்துவ உதவியாளர் |

| | | |
|---|---|---|
| 31. | திருமதி ரீ. ஷிராணீ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 32. | திருமதி எஸ்.பீ.செல்லாஹென்னதி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 33. | திருமதி. ஏ.கே.டி.பிரியங்கா சோமசிரி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 34. | திருமதி ஜே.ஏ. நேஷா தேதுணு | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 35. | திருமதி. எச்.பி.சீ.எம். தஸநாயக | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 36. | திருமதி டபிள்யு.ஜீ.ஏ. மேகலா ஜீவனி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 37. | திருமதி ஏ.ஐ.எல். சிரிசேன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 38. | செல்வி ஜீ.என்.எச். அபயவர்தன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 39. | திரு. எல்.பீ. விதானகே | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 40. | திரு.ஐ.கே.ஏ.பீ. கித்சிறி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 41. | திருமதி எம்.டி.ஆர். ரஞ்சனீ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 42. | திரு. எல்.எச்.ஏ.பீ.எம். தயாரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 43. | திரு. ஆர்.டபிள்யு.ஜீ.எச். ராஜசேகர | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 44. | திரு. எம்.என்.எம் உஸாமா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 45. | திரு. டபிள்யு.எஸ். சந்தருவன் | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 46. | திரு. ஆர்.ஏ. விஜேசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 47. | செல்வி கே.டி.எம்.கே.டி. கப்பாகொட | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 48. | செல்வி எச்.எம்.எஸ். சரித்தா ஜயசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 49. | செல்வி எச்.டீ.என்.எஸ். ஹெட்டிகங்கானம | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 50. | திரு.எம். ரத்னாயக்க | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 51. | திரு. ஜீ.டி.சீ.பீ. குணரத்ன | சாரதி |
| 52. | திரு. டி.எம். அஜித் சிசிர குமார | சாரதி |
| 53. | திரு. டி.உபாலி | சாரதி |
| 54. | திரு. பி.ஏ.சுனில் ஜயரத்ன | சாரதி |
| 55. | திரு. ஏ.டபிள்யு.எம். அபேரத்ன | சாரதி |
| 56. | திரு. ஏ.ஜீ. ரஞ்சித் குமார | சாரதி |
| 57. | திரு. ஜே.ஜீ. சரத் குமார | சாரதி |
| 58. | திரு. ரீ.ஜீ. ஆனந்த | அலுவலக உதவியாளர் |
| 59. | திரு.டபிள்யு. நந்தன | அலுவலக உதவியாளர் |
| 60. | திரு. பீ.டபிள்யு.ஏ. நீல் அசங்க | அலுவலக உதவியாளர் |
| 61. | திரு. ஜீ. நிமல் | அலுவலக உதவியாளர் |
| 62. | திரு. ஈ. சுசந்த பிரபாத் | அலுவலக உதவியாளர் |
| 63. | திரு. ஏ.என்.சீ.டி அல்விஸ் | அலுவலக உதவியாளர் |
| 64. | திரு. பீ.ஏ. திலகசிரி | அலுவலக உதவியாளர் |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 5.2 வயதுப் பிரிவின் அடிப்படையிலான பதவியணி வகைப்படுத்தல்

**அட்டவணை 5.2 வயதுப் பிரிவின் அடிப்படையிலான பதவியணி வகைப்படுத்தல்- 2015**

| தொடர் இல | வயதுப் பிரிவு | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1. | 25 > | 2 | 0 |
| 2. | 26-35 | 12 | 10 |
| 3. | 36-45 | 9 | 10 |
| 4. | 46-50 | 7 | 7 |
| 5. | 51-55 | 0 | 5 |
| 6. | 55 < | 2 | 0 |
| **மொத்தம்** | | **32** | **32** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 5.3 இடமாற்றங்கள்

அரசாங்க சேவையின் சாதாரண நடைமுறைகளுக்கு இணங்க திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் இடமாற்றங்கள் வழங்கப்பட்டன . அதனடிப்படையில் 2015 ஆம் ஆண்டினுள் திணைக்களத்திலிருந்து 17 உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றனர்.

**பட்டியல் – 02 2015 ஆண்டில் இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள்**

| தொடர் இல | பெயர் | பதவி | இடமாற்றம் பெற்ற திகதி |
|---|---|---|---|
| 1. | திரு. கே.ஆர்.உடுவாவல | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2015.01.16 |
| 2. | திரு.டப்ளியூ.எம்.ஆர்.பீ. வீரசிங்ஹ | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2015.12.22 |
| 3. | திரு.எஸ்.ஆர்.டப்ளியூ.எம்.ஆர்.பீ. சத்குமார | பணிப்பாளர் | 2015.01.16 |
| 4. | திருமதி எம்.கே.சித்தாரா ஜயசேன | பணிப்பாளர் | 2015.01.16 |
| 5. | திருமதி எஸ்.என். அத்தனாயக்க | பணிப்பாளர் | 2015.11.06 |
| 6. | திரு.சீ.ஜீ. கன்னங்கர | உதவிப் பணிப்பாளர் | 2015.03.27 |
| 7. | திருமதி ஏ.ஆர்.பீ.டி. ராஜபக்ஷ | நிர்வாக உத்தியோகத்தர் | 2015.04.30 |
| 8. | திருமதி ஜே.கே. சுதர்ஷனி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.04.30 |
| 9. | திருமதி கே.எம்.எஸ். வனிகசேகர | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.07.17 |

| | | | |
|---|---|---|---|
| 10. | திருமதி எம்.எச்.என். கீத்திகா | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.08.10 |
| 11. | திருமதி ஆர்.எம்.ஐ.கே.ரத்னாயக்க | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.11.12 |
| 12. | திரு.கே.பீ. நதுன் சமீர | முகாமைத்துவ உதவியாளர் | 2015.11.16 |
| 13. | திரு.கே.ஏ. சுனெத் சந்தருவன் | முகாமைத்துவ உதவியாளர் | 2015.11.16 |
| 14. | செல்வி ஹிரந்தி தீகல | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 2015.10.06 |
| 15. | திரு.கே.பீ.சிறிசோம | சாரதி | 2015.02.18 |
| 16. | திரு.ரீ.கே.ஷாம் நிஷாந்த | சாரதி | 2015.07.30 |
| 17. | திரு. பீ.எம். ஆரியதிலக்க | சாரதி | 2015.09.25 |

மூலம் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

2015 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று திணைக்களத்தில் சேவையில் இணைக்கப்பட்ட உத்தியோக்கதர்களின் எண்ணிக்கை 18 ஆகும். அவர்கள் பல்வேறு அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டவர்களாவர்.

**பட்டியல் – 03 2015 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று வந்தஉத்தியோகத்தர்கள்**

| தொடர் இல | பெயர் | பதவி | இடமாற்றம் பெற்று வந்த திகதி |
|---|---|---|---|
| 1. | திரு.டப்ளியூ.எம்.ஆர்.பீ. வீரசிங்ஹ | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | 2015.05.18 |
| 2. | திரு. எம்.எம்.சி.பி.மொஹொட்டிகெதர | பணிப்பாளர் | 2015.01.19 |
| 3. | செல்வி எஸ்.ஏ.எச்.சமரசிங்க | உதவிப் பணிப்பாளர் | 2015.06.22 |
| 4. | திரு. பீ.எல்.எம். சத்துரங்க | உதவிப் பணிப்பாளர் | 2015.10.14 |
| 5. | திரு. எம். ஏ.எஸ். மதுஷங்க | உதவிப் பணிப்பாளர் | 2015.11.24 |
| 6. | திருமதி கே.டீ.ஐ.எஸ்.கே. சிறிவர்த்தன | கணக்காளர் | 2015.12.30 |
| 7. | திரு. பீ.கே. சரத்சந்திர | நிர்வாக உத்தியோகத்தர் | 2015.06.22 |
| 8. | திரு.கே.ஏ. சுனெத் சந்தருவன் | முகாமைத்துவ உதவியாளர் | 2015.02.23 |
| 9. | திரு.கே.பீ. நதுன் சமீர | முகாமைத்துவ உதவியாளர் | 2015.02.23 |
| 10. | திருமதி கே.எம்.எஸ். வனிகசேகர | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.05.12 |

| | | | |
|---|---|---|---|
| 11. | திரு.ஐ.கே.ஏ.பீ. கித்சிறி | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.07.16 |
| 12. | திருமதி ஆர்.எம்.ஐ.கே.ரத்னாயக்க | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.09.09 |
| 13. | செல்வி எச்.டீ.என்.எஸ். ஹெட்டிகங்கானம | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.10.12 |
| 14. | செல்வி எச்.எம்.எஸ். சரித்தா ஜயசிங்ஹ | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.10.13 |
| 15. | திரு.எம். ரத்னாயக்க | அரச முகாமைத்துவ உதவியாளர் | 2015.10.30 |
| 16. | திரு. ஜே.ஜீ. சரத் குமார | சாரதி | 2015.11.06 |
| 17. | திரு. பீ.எம். ஆரியதிலக்க | சாரதி | 2015.04.01 |
| 18. | திரு. ஏ.டபிள்யு.எம். அபேரத்ன | சாரதி | 2015.08.05 |

மூலம் - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 5.4 ***பயிற்சி நிகழ்ச்சிகள்***

### 5.4.1 ***உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்***

திணைக்கள உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை விருத்திக்காகப் பயிற்சி நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு நடாத்தும் நோக்கில் திணைக்களத்திற்கான வருடாந்த பயிற்சித் திட்டம் தயாரிக்கப்படுகின்றது. இந்த வருடாந்த பயிற்சித் திட்டத்தை த் தயாரிக்கும் போது திணைக்கள உத்தியோகத்தர்களின் தேவைகளும் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளும் கவனத்திற் கொள்ளப்படுகின்றன . அதனடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் திணைக்களத்தினுள் வழங்கப்பட்ட பயிற்சிகள் அட்டவணை 5.3 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை- 5.3** **பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்-2015**

| தொடர் இல | துறை | பயிற்சி நிறுவனம் | பங்கேற்றோர் தொகை |
|---|---|---|---|
| 1. | அரச ஆவணங்கள் நிர்வகிப்பு மற்றும் ஆவணக்காப்புச் சட்டம் தொடர்பாக அரசாங்க உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல் | தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களம் | 01 |
| 2. | சரப்/காசாளர் பதவியின் வகிபாகமும் பொறுப்புக்களும் | திறன் விருத்தி மன்றம் | 01 |
| 3. | இலங்கை பொதுச் சேவைத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் தொடர்பான பயிற்சிப் பாடநெறி | ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் | 01 |
| 4. | கணக்கீட்டு எழுதுநர்களின் வகிபாகமும் பொறுப்பும் தொடர்பான பயிற்சிப் பாடநெறி | திறன் விருத்தி மன்றம் | 04 |

| | | | |
|---|---|---|---|
| 5. | அரச நிர்வாகக் கட்டமைப்புப் பயிற்சிப் பாடநெறி | திறன் விருத்தி மன்றம் | 01 |
| 6. | கணினி வன்பொருள் பாடநெறி | தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் | 25 |
| 7. | முகாமைத்துவ நிகழ்ச்சி - 2015 | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் | 10 |
| 8. | தொழில்சார் நோக்கங்களுக்கான ஆங்கிலமொழி சான்றிதழ் கற்கைநெறி | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் | 02 |
| 9. | தகவல் தொழில்நுட்பத்திற்குரிய பொருட்கொள்வனவு மற்றும் மதிப்பீடு தொடர்பான பயிற்சிப்பட்டறை | திறன் விருத்தி மன்றம் | 01 |
| 10. | பூகோள உட்கட்டமைப்பு முதலீடு, பூகோள மீட்பு மற்றும் சீனாவின் பகிரங்க விரிவுரை | வங்கியியல் கற்கைகளுக்கான மத்திய நிலையம் | 01 |
| 11. | தகவல் அறியும் சட்டத்தை செயற்படுத்தும் போது அரசாங்க உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சவால்கள் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் | 01 |
| 12. | மேம்படுத்தப்பட்ட செயற்திட்டத் தயாரிப்பும் தரமதிப்பீடும் தொடர்பான பயிற்சிப் பாடநெறி | மிலோதா நிறுவனம் | 01 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

### 5.4.2 வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சிகள்

திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கி அவர்களின் அனுபவங்களையும் விடய அறிவையும் விருத்தி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதனடிப்படையில் 12 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயற்சி வாய்ப்புக்கள் கிடைத்தன.

பட்டியல் – 05 வெளிநாட்டுப் பயிற்சிகளில் பங்கு பற்றல் - 2015

| தொடர் இல | பெயர் | பதவி | பெற்ற பயிற்சி | நாடு | காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | திரு.டப்ளியூ.எம். ஆர்.பீ. வீரசிங்ஹ | மேலதிகப் பணிப்பாளர் நாயகம் | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி | மலேஷியா | 2015.08. 29 2015.09.07 |
| 2. | திருமதி.டி.எச்.எஸ். புள்ளபெரும | பணிப்பாளர் | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி | மலேஷியா | 2015.08. 29 2015.09.07 |
| 3. | திருமதி எஸ்.என். அத்தனாயக்க | பணிப்பாளர் | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி | மலேஷியா | 2015.08. 29 2015.09.07 |
| 4. | திரு. எம்.ஏ. கருணாரத்ன | உதவிப் பணிப்பாளர் | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி | மலேஷியா | 2015.08. 29 2015.09.07 |
| 5. | திருமதி டபிள்யு.டி. சேபாலிகா | உதவிப் பணிப்பாளர் | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி | மலேசியா | 2015.08. 29 2015.09.07 |
| 6. | திருமதி.டி.எச்.எஸ். புள்ளபெரும | பணிப்பாளர் | அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கான அரசாங்க மனிதவள முகாமைத்துவம் | சீனா | 2015.09.09 2015.09.30 |
| 7. | திருமதி என். கொடகந்த | பணிப்பாளர் நாயகம் | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி | மலேஷியா | 2015.09.12 2015.09.22 |
| 8. | திருமதி. எஸ்.எச்.டி. களுதந்திரி | பணிப்பாளர் | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி | மலேஷியா | 2015.09.12 2015.09.22 |
| 9. | திரு. எம்.எம்.சி.பி. மொஹொட்டிகெதர | பணிப்பாளர் | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி | மலேஷியா | 2015.09.12 2015.09.22 |
| 10. | செல்வி எம்.டி. அபேகுணவர்தன | உதவிப் பணிப்பாளர் | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி | மலேஷியா | 2015.09.12 2015.09.22 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | திரு.டபிள்யு.எச்.ஜீ. கோசல | உதவிப் பணிப்பாளர் | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி | மலேஷியா | 2015.09.12 2015.09.22 |
| 12. | செல்வி எஸ்.ஏ.எச்.சமரசிங்க | உதவிப் பணிப்பாளர் | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி | மலேஷியா | 2015.09.12 2015.09.22 |
| 13. | திரு. எஸ்.எம்.எம்.டி. சமரவீர | ஆராய்ச்சி உதவியாளர் | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி | மலேஷியா | 2015.09.12 2015.09.22 |
| 14. | திரு. எம்.ஏ. கருணாரத்ன | உதவிப் பணிப்பாளர் | பொது நிருவாகத்துக்கான கட்டார் - பிராந்திய பயிற்சி நிலையத்தின் "அரச துறையில் மனிதவள அபிவிருத்தியும் முகாமைத்துவமும்" தொடர்பான பாடநெறி | கட்டார் | 2015.10.12 2015.10.15 |
| 15. | செல்வி எம்.டி. அபேகுணவர்தன | உதவிப் பணிப்பாளர் | ஆசிய நாடுகளிலுள்ள சிவில் உத்தியோகத்தர்களுக்கான பொது நிருவாகம் பற்றிய கருத்தரங்கு | சீனா | 2015.10.12 2015.10.31 |
| 16. | திரு. எம்.எம்.சி.பி. மொஹொட்டிகெதர | பணிப்பாளர் | சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கான தேசிய அரசாங்க நிருவாகம் | ஜப்பான் | 2015.10.24 2015.11.14 |
| 17. | திருமதி என். கொடகந்த | பணிப்பாளர் நாயகம் | அரச துறயின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரிகளுக்கான சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் கொள்கை மற்றும் தலைமைத்துவம் தொடர்பான பிராந்திய ஆய்வுப் பயணம் | அவுஸ்திரேலியா | 2015.11.27 2015.12.07 |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 5.5 வருடாந்த தபால்

2015 ஆம் ஆண்டில் திணைக்களத்துக்கு கிடைத்த கடிதங்களின் எண்ணிக்கை 6801 ஆகும். இக்கடிதங்கள் பல்வேறு விடயங்கள் தொடர்பானவையாகும் . அரசாங்க நிறுவனங்களுக்கான புதிய பதவிகளை உருவாக்குதல் , வெற்றிடங்களை நிரப்புதல் என்பவற்றுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அனுமதி கோருதல் , பல்வேறு கொடுப்பனவுகளுக்கான கோரிக்கை, விளக்கங்கள் கோருதல் , பொது நிர்வாகம் ஆகிய விடயத் தலைப்புக்கள் அவற்றில் முக்கியமானவையாகும்.

***அட்டவணை – 5.4 2015 ஆம் ஆண்டில் கிடைத்த கடிதங்களின் எண்ணிக்கை***

| தொடர் இல | மாதம் | கடிதங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஜனவரி | 449 |
| 2. | பெப்ரவரி | 496 |
| 3. | மார்ச் | 683 |
| 4. | ஏப்ரல் | 505 |
| 5. | மே | 487 |
| 6. | ஜூன் | 612 |
| 7. | ஜூலை | 647 |
| 8. | ஆகஸ்ட் | 543 |
| 9. | செப்டம்பர் | 587 |
| 10. | ஒக்டோபர் | 594 |
| 11. | நவம்பர் | 584 |
| 12. | டிசம்பர் | 614 |
| **மொத்தம்** | | **6801** |

மூலம் : முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

## 6. நிதிப் பிரிவு

2015ஆம் ஆண்டில் திணைக்களத்தின் தொழிற்பாட்டு நிகழ்ச்சியின் கீழ் மனித வள முகாமைச் செயற்திட்டத்திற்காக செலவுத் தலைப்பு 242 இற்கு ஒதுக்கப்பட்ட தொகை 48,400,000/- ரூபாவாகும். உண்மையாக ஏற்பட்ட செலவினம் ரூபா 46,447,317.74 ஆகும். அதனடிப்படையில் ஒதுக்கப்பட்ட தொகையில் 96% திணைக்களத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டது. நிதி முன்னேற்ற அறிக்கை வருமாறு.

**அட்டவணை 6.1** **நிதி முன்னேற்ற அறிக்கை(2014-2015)**

| செலவுத் தலைப்பு | | 2014 | | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு (நிறுத்தி வைக்கப்பட்ட தொகைகள் தவிர) (ரூபா) | மொத்தச் செலவு (ரூபா) | செலவுகளின் சதவீதம் (%) | அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா) | மொத்தச் செலவு (ரூபா) | செலவுகள் சதவீதம் (%) |
| **மீளெழும் செலவுகள்** | | **36,720,000.00** | **33,818,293.66** | **92** | **44,325,000.00** | **43,105,549.00** | **97** |
| **ஆளணி வேதனாதிகள்** | | **26,925,000.00** | **25,295,515.72** | **94** | **34,075,000.00** | **33,824,612.89** | **99** |
| 1001 | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 17,000,000.00 | 15,386,291.45 | 91 | 15,500,000.00 | 15,421,634.77 | 99 |
| 1002 | மேலதிக நேர மற்றும் விடுமுறைக் காலச் சம்பளம் | 900,000.00 | 885,202.44 | 98 | 700,000.00 | 556,738.47 | 80 |
| 1003 | வேறு படிகள் | 9,025,000.00 | 9,024,021.83 | 100 | 17,875,000.00 | 17,846,239.65 | 100 |
| **பிரயாணச் செலவுகள்** | | **600,000.00** | **455,548.08** | **76** | **405,000.00** | **233,920.75** | **58** |
| 1101 | உள்நாட்டு | 150,000.00 | 108,062.50 | 72 | 200,000.00 | 125,987.50 | 63 |
| 1102 | வெளிநாட்டு | 450,000.00 | 347,485.58 | 77 | 205,000.00 | 107,933.25 | 53 |
| **வழங்கல்கள்** | | **4,660,000.00** | **4,211,755.06** | **90** | **3,935,000.00** | **3,582,476.84** | **91** |
| 1201 | காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 1,950,000.00 | 1,852,595.22 | 95 | 1,525,000.00 | 1,447,766.03 | 95 |
| 1202 | எரிபொருள் | 2,500,000.00 | 2,186,813.54 | 87 | 2,090,000.00 | 1,906,585.87 | 91 |
| 1203 | உணவு, பானங்கள் மற்றும் சீருடை | 170,000.00 | 158,386.30 | 93 | 200,000.00 | 108,955.82 | 54 |
| 1205 | வேறு | 40,000.00 | 13,960.00 | 35 | 120,000.00 | 119,169.12 | 99 |
| **பராமரிப்புச் செலவுகள்** | | **1,200,000.00** | **779,398.28** | **65** | **1,900,000.00** | **1,771,757.06** | **93** |
| 1301 | வாகனங்கள் | 900,000.00 | 675,959.64 | 75 | 1,600,000.00 | 1,552,516.82 | 97 |
| 1302 | இயந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் | 300,000.00 | 103,438.64 | 34 | 300,000.00 | 219,240.24 | 73 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சேவைகள்** | | **2,535,000.00** | **2,307,054.49** | **91** | **3,110,000.00** | **2,877,714.31** | **93** |
| 1401 | போக்குவரத்து | 775,000.00 | 630,044.51 | 81 | 800,000.00 | 720,000.00 | 90 |
| 1402 | தபால் மற்றும் தொலைத்தொடர்பு | 1,160,000.00 | 1,148,646.90 | 99 | 1,610,000.00 | 1,609,187.41 | 100 |
| 1405 | வேறு | 600,000.00 | 528,363.08 | 88 | 700,000.00 | 548,526.90 | 78 |
| **மாற்றல்கள்** | | **800,000.00** | **769,022.03** | **96** | **900,000.00** | **815,067.16** | **91** |
| 1506 | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான ஆதனக் கடன் வட்டி | **800,000.00** | **769,022.03** | **96** | **900,000.00** | **815,067.16** | **91** |
| **மூலதனச் செலவுகள்** | | **2,100,000.00** | **1,462,961.38** | **70** | **4,075,000.00** | **3,341,768.73** | **82** |
| **மூலதனச் சொத்துக்களுக்கான புனரமைப்பு மற்றும் மேம்பாடு** | | **1,100,000.00** | **654,971.38** | **60** | **900,000.00** | **220,241.00** | **24** |
| 2002 | இயந்திரங்கள் மற்றும் பொறித் தொகுதிகள் | 200,000.00 | 24,854.50 | 12 | 200,000.00 | - | - |
| 2003 | வாகனங்கள் | 900,000.00 | 630,116.88 | 70 | 700,000.00 | 220,241.00 | 31 |
| **மூலதனச் சொத்துக்களின் கொள்ளல்** | | **600,000.00** | **582,125.00** | **97** | **1,225,000.00** | **1,185,549.90** | **97** |
| 2102 | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 600,000.00 | 582,125.00 | 97 | 1,225,000.00 | 1,185,549.90 | 97 |
| **திறன் விருத்தி** | | **400,000.00** | **225,865.00** | **56** | **1,950,000.00** | **1,935,977.83** | **99** |
| 2401 | பயிற்சிகள் மற்றும் திறன் விருத்தி | 400,000.00 | 225,865.00 | 56 | 1,950,000.00 | 1,935,977.83 | 99 |
| **மொத்தம்** | | **38,820,000.00** | **35,281,255.04** | **99** | **48,400,000.00** | **46,447,317.74** | **96** |

மூலம் : கணக்கீட்டுப் பிரிவு - முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

